பாடல் இயற்றல் போட்டி

# இலஞ்சம் ஊழலற்ற நாட்டை உருவாக்குவோம்!

இலஞ்சம், ஊழல் இவை இல்லா வளமான
இலங்கையை உருவாக்குவோம்! - யார்க்கும்
நலந்தரு சட்டங்களால் இம் முறைமையை
நாட்டை விட்டே ஓட்டுவோம்! .... (இலஞ்)

-●-

ஊடக உதவிகளோடு இலஞ்சம், மற்றும்
ஊழலைச் சாடுகிறோம்! - நல்ல
பாடங்களைப் அமைப்பும் செய்திகளாலே
படிப்பினை ஊட்டிடுவோம்! .... (இலஞ்)

-●-

கல்வி வளர்ச்சியால் இலஞ்சம் ஊழல்கள்
கட்டாயம் ஒழிந்திடுமே! - வாழ்வில்
நல்லோர் ஒருபோதும் இலஞ்சம், ஊழல்களில்
நாட்டம் கொள்ளார்களே! .... (இலஞ்)

-●-

ஊழல் மலிந்திடல் நாட்டின் வருவாயில்
உயர்வு காணுமேது? — தாம்
வாழப் பிறரிடம் இலஞ்சம் பெறுவோரால்
வளருமே இங்கு கேடு! .... (இலஞ்)

-●-

கோடி கோடியாய் ஊழல் செய்வோரால்
கொடுமை மலிகின்றதே! — மிக்க
வாடி உழைப்போரும் வறுமைக் கோட்டினில்
வாழும் நிலையாகுதே! .... (இலஞ்)

-●-

* அறிந்த தொழில் நுட்ப அறிவால் இலஞ்சம் பெறும்
அனைவரையும் தண்டிப்போம்! - இதை
அறிந்து பிறரும் இங்கு திருந்தி வாழ்ந்திட
அனைத்து வழிகளும் வகுப்போம்! .... (இலஞ்)

-●-

கொடுக்கல் வாங்கல்களை கணனிமயமாக்கின்
குறைந்திடும் இலஞ்ச ஊழல்! — இதை
விடுத்து கையில் பணம் கொடுப்பதாலன்றோ
விஞ்சிடும் இலஞ்சம், ஊழல்! .... (இலஞ்)

●

ஊழல், இலஞ்சம் அற்ற நாட்டாரென்றெம்மை
உலகம் வாழ்த்திட வைப்போம்! - இந்த
வாழப் பிறந்த நாம் வாழு வழிகளில்
வாழ்ந்தே உலகினை வெல்வோம்! .... (இலஞ்)

— முற்றும் —

நன்றி

* C.C.T.V. Camera